# உயர்கல்வி நிறுவனங்களில் கேலிவதையின் அச்சுறுத்தலைத் தடைசெய்தல் மீதான யுஜிசி ஒழுங்குமுறைகளின் சுருக்கம், 2009.

1. **தோற்றுவாய்:** மாண்புமிகுஉச்சநீதிமன்றத்தின் 08.05.2009 தேதியிட்ட அறிவுரையின்படியும், கேலிவதையின் கசையைத் தடைசெய்ய, தடுக்க மற்றும் நீக்குவதற்கான மத்திய அரசு மற்றும் பல்கலைக் கழக மானியக்குழுவின் தீர்மானத்தைக் கருத்தில் கொண்டும் அமைக்கப்படுகின்றது.

2. குறிக்கோள்: கேலிவதையை அதன் அனைத்து வடிவங்களிலும் இந்த ஒழுங்குமுறைகளின் கீழ் தடுப்பதன் மூலம் நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்கள், நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள் மறும் பிற உயர் கல்வி நிறுவனங்களிலிருந்து நீக்குவதற்கும், அதைப் போன்ற நிகழ்வுகள் நிகழாமல் தடுப்பதற்கும், அத்தகய கேலிவதையில் ஈடுபடுவோரை இந்த ஒழுங்குமுறைகளில் வழங்க பட்டபடியும் தகுந்த நடைமுறைச் சட்டத்தின்படியும் தண்டிப்பதற்கும்.

3. எது கேலிவதை என்று நிர்மாணிக்கப்படுகின்றது: கேலிவதை என்பது கீழே குறிப்பிடப்படுள்ள செய்கைகளில் ஏதேனும் ஒன்று அல்லது அதிக செய்கைகளால் நிர்மாணிக்கப்படுகின்றது.
   a) ஏதேனும்மாணவர்அல்லதுமாணவர்கள்மூலம்வாய்மொழிமூலமாகவோ அல்லதுஎழுத்தின்மூலமாகவோஅல்லதுகேலியின் விளைவைக் கொண்டிருக்கும் ஓர் செய்கை மூலமாகவோ செய்யப்படும் ஏதேனும் நடத்தை, புதிய மாணவர் அல்லது பிற மாணவரை முரட்டுத்தனமாக நடத்துதல் அல்லது கையாளுதல்.
   b) ஏதேனும் புதிய மாணவர் அல்லது ஏதேனும் பிற மாணவருக்கு உபத்திரவம், துன்பம், உடல்ரீதியான அல்லது மனோரீதியான தீங்கினை விளைவிக்கும் அல்லது விளையும் சாத்தியத்தை ஏற்படுத்தும் அல்லது அதன்பின்னர் பயம் அல்லது அச்ச உணர்வை எழுப்பும் ஏதேனும் மாணவர் அல்லது மாணவர்களின் போக்கிரித்தனமானஈடுபாடு அல்லது ஒழுங்கீனமான நடவடிக்கைகள்.
   c) எந்த மாணவரையாவது, அந்த மாணவர் செய்ய விரும்பாத மற்றும் அவமானத்தை உருவாக்கும் அல்லது விளைவிக்கும் தன்மை கொண்ட ஏதேனும் செய்கையைச் செய்யும்படி கேட்டல் அல்லது வேதனைப்படுத்துதல் அல்லது சங்கடப்படுத்துதல், இதனால் அந்த புதிய மாணவர் அல்லது ஏதேனும் பிறமாணவருக்கு உடல்ரீதியாக அல்லது மனோரீதீயாக மோசமான பாதிப்புகளுக்குள்ளாக்குதல்,
   d) ஓர் மூத்த மாணவரால் செய்யப்படும், ஏதேனும் பிற மாணவர் அல்லது புதிய மாணவரின் வழக்கமான கற்கும் நடவடிக்கையைத் தடுக்கும், பாதிக்கும் அல்லது தொந்தரவு செய்யும் ஏதேனும் செய்கை.
   e) ஓர் தனிப்பட்ட மாணவர் அல்லது ஓர் மாணவர்கள் குழுவுக்கு ஒதுக்கப்பட்ட கல்விப் பணிகளை நிறைவு செய்வதற்காக ஓர் புதிய

மாணவர் அல்லது ஏதேனும் பிற மாணவரின் சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ளுதல்.

f) பலாத்காரமாக பணம் பறித்தல் அல்லது பலவந்தமான செலவு சுமையை ஓர் புதிய மாணவர் அல்லது ஏதேனும் பிற மாணவரின் மேல் போடுதல் போன்ற மாணவர்களின் ஏதேனும் செய்கை.

g) பாலியல் தொந்தரவு, ஓரினச்சேர்க்கைக்கான தாக்குதல்கள், உடைகளைக் களைதல், ஆபாசத்திணிப்புகள் மற்றும் கீழ்த்தரமான செயல்கள், சைகைகள், உடலில் காயங்களை ஏற்படுத்துதல் அல்லது சுகாதாரத்திற்கோ அல்லது நபருக்கோ ஏற்படுத்தும் ஏதேனும் பிற அபாயங்கள் போன்ற உடல்ரீதியான அனைத்துத் துன்புறுத்தல்கள் செய்யும் ஏதேனும் செய்கைகள்.

h) ஏதேனும் செய்கைகள் அல்லது வாய்மொழி, மின்னஞ்சல், தபால், பொது இடத்தில் அவமானப்படுத்துல், துன்புறுத்தி இன்பம் காணுதல், ஆகியவற்றின் மூலம் துன்புறுதுதல்.

i) ஓர் புதிய மாணவர் அல்லது ஏதேனும் பிற மாணவர் மீது சித்திரவதை செய்வதில் இன்பங்காணுதல் அல்லது தனது பலத்தை, அதிகாரத்தை அல்லது மேன்மையைக் காட்டுதல் என்ற நோக்கத்தையுடைய அல்லது இல்லாத ஓர் மாணவரால், ஓர் புதிய மாணவரின் அல்லது ஏதேனும் பிற மாணவரின் மனநலம் மற்றும் தன்னம்பிக்கையைப் பாதிக்கும் ஏதேனும் செய்கை.

4. கேலிவதையைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள்: கல்விநிறுவன நிலை, பல்கலைக்கழக நிலை, மாவட்ட நிலை முதலிய பலநிலைகளில் கேலிவதையைத் தடுப்பதற்குப் பல நடவடிக்கைகள் உள்ளன. அவற்றுள் மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியமானவையாவன:

- தகவல் தெரிவிக்கப்பட்ட எந்தவடிவிலான கேலிவதைச் சம்பவங்களை எந்த ஒரு கல்விநிறுவனமும் அனுமதிக்கவோ மன்னித்து விட்டுவிடவோ முடியாது; மேலும் அனைத்துக் கல்வி நிறுவனங்களும் கல்விநிறுவனத்திற்குள்ளோ அல்லது வெளியேயோ கேலிவதையை நீக்கும் நோக்கத்தை அடைய இந்த ஒழுங்குமுறைகளை வழங்குதல் உள்ளடக்கிய ஆனால் வரையறை செய்யாத, அவசியமான தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.
- அனைத்துக் கல்வி நிறுவனங்களும் கேலிவதைக் குற்றஞ்சாட்டப்பட்ட மற்றும் / அல்லது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கேலிவதைக்கு உடந்தையாயிருந்த, அல்லது கேலிவதையை நடத்த செய்யப்பட்ட கூட்டுச்சதியில் ஓர் அங்கமாக இருந்ததாகக் கண்டறியப்படும் மாணவர்கள் மீது இந்த ஒழுங்குமுறைகளுக்கிணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- எந்த கல்வி நிறுவனத்தாலும் ஏதேனும் மின்னணு, ஒலி ஒளி அல்லது அச்சு அல்லது ஏதேனும் பிற ஊடகங்கள் மூலம் எந்த பாடத்திட்டதிலாவது மாணவர்களைச் சேர்ப்பதற்காக வெளியிடப்படும் ஒவ்வொரு பொது அறிக்கை கல்விநிறுவனத்தில் கேலிவதை முற்றிலும் தடை

செய்யப்பட்டுள்ளதையும்,எந்த மாணவராவது கேலிவதைக் குற்றஞ்சாட்டப்பட்ட மற்றும் / அல்லது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கேலிவதைக்கு உடந்தையாயிருந்த, அல்லது கேலிவதையை நடத்த செய்யப்பட்ட கூட்டுச்சதியில் ஓர் அங்கமாக இருந்ததாகக் கண்டறியப்பட்டால், இந்த ஒழுங்குமுறைகளுக்கிணங்க மற்றும் அச்சமயத்தில் நடைமுறையில் இருக்கும் ஏதேனும் தண்டனைச் சட்டங்களின் கீழ் தண்டனைக்குள்ளாக்கப்படுவார் என்பதையும் திட்டவட்டமாகக் குறிப்பிட வேண்டும்.

- கேலிவதைத் தடுப்பு உதவி மையம் மற்றும் கல்விநிறுவனத்தின் தலைவர், ஆசிரியர்கள், கேலிவதைத் தடுப்புக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் கேலிவதைத் தடுப்புப் படைகளின் உறுப்பினர்கள், மாவட்ட மற்றும் துணை மண்டல அதிகாரிகள், விடுதிக்காப்பாளர்கள், மற்றும் பிற அலுவலர்கள் அல்லது அதிகாரிகள் ஆகியோரை உள்ளடக்கிய ஆனால் வரைமுறைப்படுத்தாத கல்வி நிறுவனத்தின் அனைத்து முக்கிய அலுவலர்கள் ஆகியோரின் தொலைபேசி எண்கள், சேர்க்கை விண்ணப்பம் / அறிவுறுத்தல்களின் சிறு புத்தகம் அல்லது தகவல் அறிக்கையில் வெளியிடப்பட வேண்டும்.
- அனுமதி, சேர்க்கை அல்லது பதிவுசெய்தல் அகியவற்றிற்கான விண்ணப்பம் கண்டிப்பாக மாணவரால் கையொப்பமிடப்பட்ட பரிந்துரைக்கப்பட்ட வடிவிலான ஓர் கேலிவதைத் தடுப்பு உறுதிச் சான்றுடனும் பெற்றோர் / காப்பாளரால் கையொப்பமிடப்பட்ட மற்றோர் கேலிவதைத் தடுப்பு உறுதிச் சான்றுடனும் வழங்கப்பட வேண்டும்.
- ஏதேனும் துன்பந்தரும் செய்தி கேலிவதைத் தடுப்பு உதவிமையத்தில் பெறப்பட்டால் அது உடனடியாக கல்வி நிறுவனத்தின் தலைவர், விடுதிகளின் காப்பாளர், இணைத்துக்கொள்ளப்படும் பல்கலைக் கழகத்தின் ஒருங்கிணைப்பு அலுவலர், சம்பந்தப்பட்ட மாவட்ட அதிகாரிகள் மற்றும் தேவைப்பட்டால் மாவட்ட நீதிபதி மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோருக்குத் தெரிவிக்கப்படும், மேலும் அதே சமயத்தில் ஊடகங்களும் பொதுமக்களும் இதை அணுகும்படிக்கு இத்தகவல் ஓர் பொது இணையதளத்தில் வலையேற்றம் செய்யப்படும்,
- கேலிவதைத் தடுப்புப் படையின் பரிந்துரைகளைப் பெற்றதன் மேல் அல்லது கேலிவதை சம்பவம் நடைபெற்றதற்கான ஏதேனும் அறிக்கை பெறப்பபட்ட தகவலைப் பெற்றதன் மேல், கல்வி நிறுனத்தின் தலைவர் அவ்வழக்கு தண்டனைச்சட்டங்களின் கீழ் வருகின்றதா என்பதை உடனடியாக தீர்மானிக்க வேண்டும், அவ்வாறு தீர்மானிக்கப்பட்டால், தான் நேரடியாகவோ அல்லது தன் சார்பாக கேலிவதைத் தடுப்புக் குழுவின் ஓர் உறுப்பினர் மூலமாகவோ காவல்துறை மற்றும் உள்ளூர் அதிகாரிகளிடம் தக்க தண்டனைப் பிரிவுகளின் கீழ் ஓர் முதல் தகவல் அறிக்கையை எஃப்ஐஆர் தகவல் அல்லது பரிந்துரை பெறப்பட்ட இருபத்து நான்கு மணி நேரங்களுக்குள் பதிவு செய்ய வேண்டும்.
- ஆணையம், ஒவ்வொரு மாணவர் மற்றும் அவரது பெற்றோர் / காப்பாளர்களால் அளிக்கப்பட்ட சுய உறுதிச்சான்றுகளிலிருந்து கல்வி நிறுவனத்தால் அல்லது அதற்கென்று கல்வி நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட

ஓர் முகைமையின் மூலம் உருவாக்கப்பட்டு மின்னனு முறையில் சேமிக்கப்பட்ட ஓர் பொருத்தமான தரவுதளத்தைப் பராமரிக்கும், மேலும் அந்த தரவுதளங்கள் பெறப்படும் கேலிவதைப் புகார்கள் மற்றும் அதன்பின்னர் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றின் பதிவேடுகளாகவும் செயல்படும்.

- ஆணையம், எந்த கல்வி நிறுவனத்திற்கும், ஆணையத்தின் பொது மற்றும் சிறப்புத் திட்டங்களின் கீழ் பயன்பெறும் ஏதேனும் நிதியுதவி அல்லது மானிய உதவியைப் பொறுத்து பயன்பாட்டுச் சான்றிதழில் அக்கல்வி நிறுவனம் கேலிவதைத் தடுப்பு நடவடிக்கைகளுடன் இணங்கியிருக்கின்றது என்றதோர் குறிப்பிட்ட நிபந்தனையை சேர்க்கும்.
- ஓர் கல்விநிறுவனத்தில் நடைபெறும் ஏதேனும் கேலிவதை சம்பவங்கள், என்ஏஏசி அல்லது ஏதேனும் பிற அங்கீகரிக்கப்பட்ட சான்றளிக்கும் முகைமைகள் அங்கீகாரம், தரவரிசை அல்லது தரப்பிரிப்பு நோக்கங்களுக்காக கல்வி நிறுவனத்தை அணுகும்போது அவற்றின் மூலம் பெறப்பட்ட அதன் அங்கீகாரம், தரவரிசை அல்லது தரப்பிரிப்பு போன்றவற்றை பாதிக்கும்.
- எந்த ஒரு கேலிவதைச் சம்பவங்களும் நடைபெறவில்லை என்ற குற்றமற்ற பதிவேட்டை அறிக்கை செய்யும் கல்வி நிறுவனங்களுக்கு நிதியுதவிகள் வழங்குதலில் முன்னுரிமை வழங்க ஆணையம் இசையலாம், இல்லையேல் அவை சட்டத்தின் 12B பிரிவின் கீழ் மானியங்களைப் பெற தகுதியுள்ளவையாகின்றன

5. கேலிவதை நிகழ்வில் நிர்வாகரீதியான நடவடிக்கைகள் : கல்விநிறுவனம் கேலிவதையில் ஈடுபட்டதாகக் கண்டறியப்படும் ஓர் மாணவனை பின்வரும் செய்முறைகளுக்குப் பின்னர் இதன் கீழ்பரிந்துரைக்கப்படும் முறையில் தண்டிக்கும்:
   - தண்டனை தொடர்பாக கல்விநிறுவனத்தின் கேலிவதை தடுப்புக் குழு தக்கதோர் முடிவினை எடுக்கும், இல்லையேல் ஒவ்வொரு கேலிவதை சம்பவத்தின் காரணிகளையும் நிகழ்ந்த அக்கேலிவதைச் சம்பவத்தின் தன்மை மற்றும் முக்கியத்துவத்தைப் பொறுத்து  கேலிவதைத்தடுப்புப் படையின் பரிந்துரைகளின்படி ஓர் முடிவினை எடுக்கும்.
   - குற்றத்தின் தன்மை மற்றும் முக்கியத்துவத்தைப் பொறுத்து கேலிவதைத் தடுப்புப் படையினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளுக்கேற்ப கேலிவதைத் தடுப்புக்குழு குற்றஞ்சாட்டப்பட்ட மாணவருக்கு பின்வரும் தண்டனைகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ வழங்கலாம், அத்தண்டனைகளாவன:
     a) வகுப்புகளில் கலந்து கொள்ளுதல் கல்விச்சலுகைகளைப் பெறுதல் போன்றவற்றிலிருந்து இடைநீக்கம்
     b) கல்வி உதவித் தொகை / மாணவர் ஆதரவுத் தொகை மற்றும் பிற சலுகைகளை நிறுத்தி வைத்தல் / திரும்பப் பெறுதல்
     c) ஏதேனும் சோதனை / தேர்வுகள் அல்லது பிற மதிப்பீட்டுச் செயல்முறையில் கலந்து கொள்வதற்கான அனுமதி மறுத்தல்.

d) தேர்வுமுடிவுகளை நிறுத்தி வைத்தல்
e) ஏதேனும் மண்டல, தேசிய அல்லது சர்வதேச சந்திப்புகள், விளையாட்டுப் போட்டிகள், இளமைத் திருவிழாக்கள் முதலிய இடங்களில் கல்விநிறுவனத்தின் பெயரைக் குறிப்பிடுவதற்கான அனுமதி மறுத்தல்
f) விடுதியிலிருந்து இடைநீக்கம் / வெளியேற்றப்படுதல்.
g) சேர்க்கையை ரத்து செய்தல்.
h) ஒன்று முதல் நான்கு பருவங்கள் கால வீச்சிற்குக் கல்விநிறுவனத்திலிருந்து வெளியேற்றப்படுதல்.
i) கல்வி நிறுவனத்திலிருந்து வெளியேற்றப்படுதல் மற்றும் அதைத் தொடர்ந்து ஓர் குறிப்பிட்ட கால அளவிற்கு வேறுபிற கல்விநிறுவனங்களில் சேர்வதற்குத் தடைவிதித்தல்.

- கேலிவதைச் செயலிலி ஈடுபடும் அல்லது உடந்தையாக இருக்கும் நபர்கள் யாரென்று அடையாளங்காணப்படாத இடத்தில் கல்விநிறுவனமானது கூட்டுத்தண்டனை வழங்க வசதி செய்யப்படுகின்றது.
- கேலிவதைத் தடுப்புக்குழுவிவால் வழங்கப்பட்ட தண்டனை ஆணைக்கு எதிரான மேல்முறையீடு பின்வரும் நபர்களிடம் செய்யப்பட வேண்டும். (i) ஒருவேளை தண்டனை ஆணை வழங்கிய கல்விநிறுவனம் ஓர் பல்கலைக்கழத்தோடு இணைக்கப்பட்டது அல்லது பல்கலைக்கழகத்தின் ஓர் கூட்டாக விளங்குகின்றது எனில், அப்பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரிடம்,(ii) ஒருவேளைஅவ்வாணையானதுபல்கலை கழகத்தால்வழங்கப்பட்டிருந்தால், அதன்வேந்தரிடம், (iii) ஒருவேளைஅவ்வாணையானது ஓர் பாராளுமன்றசட்டத்தால் அமைக்கப்பட்ட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கல்வி நிறுவனம் எனில் அக்கல்வி நிறுவனத்தின் தலைவர் அல்லது வேந்தரிடம் செய்யப்பட வேண்டும்
- நியமிக்கப்பட்ட அதிகாரியின் கருத்தின்படி, ஓர் கேலிவதை சம்பவத்தைக் குறித்து தகவல் தெரிவிக்கும் அல்லது அச்சம்பவத்தைத் தடுப்பதற்கான முறையான நடவடிக்கைகள் எடுக்கும் விஷயத்தில் ஓர் காலதாமதத்திற்குக் காரணம் கற்பிப்பது அல்லது கேலிவதை புகார்களின் மேல் பாராமுகம் அல்லது உணர்ச்சியற்ற மனப்பாங்கோடிருப்பது அல்லது கேலிவதை சம்பவம் அல்லது சம்பவங்கள் நிகழாமல் தடுப்பதற்குத் தேவைப்பட்டால் இந்த ஒழுங்குமுறைகளின் கீழ் அல்லது தகுந்த நடவடிக்கைகளை உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கத் தவறுவது போன்ற செயல்களில் ஈடுபடும் கல்விநிறுவனத்தின் எந்த ஆசிரியருக்கும் அல்லது ஊழியருக்கும், அந்த அதிகாரி துறைசார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளைத் தொடங்குவார். இதைப்போன்ற காலதாமதத்திற்குக் காரணம் கற்பிக்கும் கல்வி நிறுவனத்தின் தலைவருக்கும், நியமிக்கப்பட்ட அந்த அதிகாரி அதைப்போண்ற துறைசார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளை எடுப்பார்; மேலும் அந்த நடவடிக்கைகள்

கேலிவதைகள் நிகழாமல் தடுப்பதற்கு உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கத் தவறியதற்கு அல்லது கேலிவதையில் ஈடும்படும் எந்த மாணவரையும் தண்டிக்கத் தவறியதற்கு கேலிவதைக்கு உடந்தையாக இருப்பதற்கான தண்டனைச் சட்டங்களின் கீழ் எடுக்கப்படும் எந்த நடவடிக்கைக்கும் பாரபட்சமின்றி இருக்கும்.